©
GOVERNMENT OF TAMIL NADU
2020

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[Price : Rs . 5.60 Paise.

# TAMIL NADU GOVERNMENT GAZETTE

**PUBLISHED BY AUTHORITY**

No. 40] CHENNAI, WEDNESDAY, SEPTEMBER 30, 2020
Purattasi 14, Saarvari, Thiruvalluvar Aandu–2051

## Part VI—Section 2

**Notifications of interest to a section of the public issued by Heads of Departments, etc.**

### NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

### CONTENTS

| | Pages |
|---|---|
| **தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சென்னை.** | |
| தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பிற்கான திருத்தம் .. .. .. .. | 144–147 |
| தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பிற்கான திருத்தம் .. .. .. .. | 148–156 |

## NOTIFICATIONS BY HEADS OF DEPARTMENTS, ETC.

**தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், சென்னை.**

**தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பிற்கான திருத்தம்**

*(Lr.No.TNERC/Legal/1818/2020, D.No. 816)*

**(அறிவிக்கை எண். தமிஒஆ/பவி/8–26 நாள் 09.06.2020)**

**அறிவிக்கைகள்**

No.VI(2)/44/2020.

**2003** ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **36/2003**) **46** ஆம் சட்டப் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் **181** ஆம் சட்டப் பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன் பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறது. மேற்சொன்ன சட்டத்தின் **181** ஆம் சட்டப்பிரிவின் **(3)** ஆம் உட்பிரிவினால் வேண்டுறுத்தப்பட்டவாறு அதன் வரைவு முன்னதாக வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன மின் பகிர்மான விதித்தொகுப்பில், 26 ஆம் ஒழுங்குமுறைவிதியில், **(1)** ஆம் உள் ஒழுங்குமுறைவிதியில்,

(a) 'நுகர்வோருக்கு மின் வழங்கல் கீழ்கண்ட வகைகளில் கிடைக்கும்' என்ற சொற்றொடருக்குப் பதிலாக பின்வருவன மாற்றியமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

"**1.** பின்வரும் வகைகளில் மின் வழங்கலை நுகர்வோர் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்''.

(b) கூறு **(**b**)**க்கு பதிலாக, பின்வரும் கூறு மாற்றியமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

(b) 4000 வாட் அளவுக்கு மேற்பட்டுள்ள மொத்த இணைந்துள்ள சுமையும் ஆனால் **150** கிவா அளவுக்கு மேற்படாத மின்தேவையும் உள்ள சுமைகளுக்கு மின் வழங்கலுக்கான 4 கம்பிகளும், முனைகளுக்கிடையில் **415** வோல்டுகளும், முனை மற்றும் நடுநிலைக்கிடையில் **240** வோல்டுகளும் அமைந்த மும்முனை அமைப்பு;

வரம்புரையாக, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை **112** கிவா அளவுக்கு கூடுதலாகவும் ஆனால் **150** கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது அது வரையிலும், தேவைப்படும் நுகர்வோர் பயன்படுத்தும் மின் வழங்கல் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்:

(i) உரிமதாரரால் மின் பகிர்மான மின்மாற்றி நிறுவுதலுக்கான இடம் நுகர்வோரால் இலவசமாக கொடுக்கப்படுதல் வேண்டும் மற்றும் மின் பகிர்மான மின்மாற்றி நிறுவுதலுக்கான அத்தகைய இடம் நுகர்வோரின் வளாகத்திற்குள்ளோ அல்லது நுகர்வோரின் வளாகத்திலிருந்து **50** மீட்டர் சுற்றளவுக்குள் ஒரு தனியார் நிலத்திலோ இருத்தல் வேண்டும். மின் பகிர்மான மின்மாற்றி நிறுவுதலுக்காக கொடுக்கப்பட்ட இடமானது ஆய்வு மற்றும் பராமரிப்பிற்கு எங்கு சாத்தியமோ அங்கு, நுழைவு வசதியுடன் இருத்தல் வேண்டும்.

(ii) முடிந்த வரையில், உரிமதாரர் மின் பகிர்மான மின்மாற்றியினை தாங்கி பிடித்துக் கொள்ளும் பக்கத்தட்டு (stud)/அடித்தளம் (plinth) அல்லது கற்காரை தூண் போன்ற ஏற்பாடு (concrete pillar like arrangement) முதலியன போன்று தனிப்பட்ட பிடித்துக்கொள்ளும் ஏற்பாட்டமைப்புடன் ஒற்றை கம்பம் மின் பகிர்மான மின்மாற்றியினை நுகர்வோருடைய வளாகத்தில் நிறுவுதல் வேண்டும். பிடித்துக்கொள்ளும் ஏற்பாட்டமைப்புகளுக்கான பணிகள் நுகர்வோரின் செலவில் நுகர்வோரால் செய்துமுடிக்கப்படுதல் வேண்டும்.

(iii) இணையான தளவாடங்கள்/துணைப்பொருள்களுடன் மின் பகிர்மான மின்மாற்றி நிறுவுதல் அதாவது AB இணப்பி, HG உருகிழை, DT கட்டமைப்பு / மின்கம்பம் ஆகியவைகள் உரிமதாரரால் உரிமதாரரின் செலவில் செய்து முடிக்கப்படுதல் வேண்டும்.

(iv) மின் பகிர்மான மின்மாற்றியிலிருந்து, நுகர்வோரின் மின்னளவி வரையில், மின் பகிர்மான மின்மாற்றி நுகர்வோரின் வளாகத்தில் நிறுவும்போது, உயரழுத்த மின் கம்பியின் பகுதி உள்ளடங்கலாக நிறுவல் அமைப்பு தொடர்பான பணிகளுக்கான செலவுகள் நுகர்வோரால் ஏற்கப்படுதல் வேண்டும். நுகர்வோரின் வளாகத்தில் மின்னாற்றல் வழங்கலுக்கு தேவைப்படும் மேனிலை மின் தொடர்கள்/புதைவடங்கள் இடுதல் போன்றவற்றை நிறுவுதலுக்கான பணிகள் அதிகார அமைப்பு மற்றும் ஆணையத்தால் அறிவிக்கை செய்யப்படலாகும் பாதுகாப்பு அளவுகோல்கள் மற்றும் மின் பகிர்மான விதித்தொகுப்பின் தொடர்புடைய ஒழுங்குமுறைவிதிகளுக்கு

இணங்கியிருக்கும் வகையில் செய்து முடிக்கப்படலாம்.

(v) ஒப்பளிக்கப்பட்ட மின்தேவைக்கான நிலையான / மின்தேவைக் கட்டணங்கள் ஆணையத்தின் மின்கட்டணவீத ஆணைகளில் அவ்வப்போது அறிவிக்கை செய்யப்பட்டுள்ள உயரழுத்த வகை மின் வழங்கலுக்கு பொருந்தக்கூடிய மின்கட்டணவீதங்களில் இருத்தல் வேண்டும். அதாவது மின்தேவையினை கிவா அளவிலிருந்து கிவோ ஆ–க்கு மாற்றம் ஏதும் செய்யப்படாமல் கிவோ ஆ ஒன்றுக்கு அறிவிக்கை செய்யப்பட்டுள்ள வீதத்தினை கிவா அடிப்படையில் பின்பற்றப்படுதல் வேண்டும். உதாரணமாக, 130 கிவா மின்தேவைக்கு, நிலையான/மின்தேவை கட்டணங்கள் உயரழுத்த வகைக்கு கிவோ ஆ ஒன்றுக்கு பொருந்தக்கூடிய மின்தேவைக் கட்டணங்கள் 130 பெருக்கல் [ரூ.350/–] ஆக இருத்தல் வேண்டும். மின்னாற்றலுக்கான கட்டணங்கள் ஆணையத்தின் மின்கட்டணவீத ஆணைகளில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள தாழ்வழுத்த மின்கட்டண வீதங்களுக்கு பொருந்தக்கூடியனவாக இருத்தல் வேண்டும். மின் வழங்கல் 7 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (7) ஆம் உள் ஒழுங்குமுறை விதியில் வகுத்துரைக்கப்பட்டுள்ள சூத்திரத்தின்படி மின் பகிர்மான மின்மாற்றியில் ஏற்படும் மின்னாற்றல் இழப்புகள் இத்தகைய தாழ்வழுத்த நுகர்வோர்களால் ஏற்கப்படுதல் வேண்டும்.

**விளக்கம்**–(i) இந்த திருத்தங்கள் அரசிதழில் அறிவிக்கை செய்யப்படுவதற்கு முன்னர் இருந்த தாழ்வழுத்த நுகர்வோர்கள் அதாவது இந்த ஒழுங்குமுறைவிதிகள் நடைமுறைக்கு வந்த நாளில் இருந்துவரும் நுகர்வோர்களின் மின்தேவை 112 கிவா அளவுக்கு மிகையாகவும் ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது சமமாகவும் அல்லது 112 கிவா அளவுக்கு மிகையாக கூடுதல் மின்தேவை தேவைப்படும் நுகர்வோர்கள் இந்த உள் ஒழுங்குமுறை விதியின் (b) கூறின் வரம்புரையிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு தாழ்வழுத்த வகை மின் வழங்கலை பயன்படுத்த விருப்பத்தேர்வு செய்யலாம். (b) கூறின் வரம்புரையிலுள்ள நிபந்தனைகளுக்கு விருப்பத்தேர்வு செய்யாத 112 கிவா மின்தேவைக்கு மிகையாகும் இருந்துவரும் தாழ்வழுத்த நுகர்வோர்கள், மின் வழங்கல் விதித்தொகுப்பின் 5 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (2) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின் (ii)(c)I கூறுக்கிணங்க மிகை மின்தேவை கட்டணங்கள் செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்த உள் ஒழுங்குமுறைவிதியின் (b) கூறின் வரம்புரையிலுள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க இயலாத 112 கிவா அளவுக்கு மிகுதியான ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவான அல்லது சமமான மின்தேவை தேவைப்படும் புதிய நுகர்வோர்கள் உயரழுத்த வகை மின் வழங்கலை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். 112 கிவா அளவுக்கு மிகையாக கூடுதல் மின்தேவை தேவைப்படும் 112 கிவா அளவு மற்றும் அதற்கு குறைவாக ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை இருக்கும் இருந்துவரும் நுகர்வோர்களுக்கும் இவை பொருந்தக்கூடியதாகும்.''

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை–600 008.
2020 செப்டம்பர் 17.

**சு. சின்னராஜலு,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**விளக்கவுரை**

உயரழுத்த / தாழ்வழுத்த மின்தொடர் விகிதத்தை மேம்படுத்துவதற்கும், தொழில் கொள்கை மற்றும் முன்னேற்றத் துறையின் இலகுவாக தொழில் செய்தல் திட்டத்தின் கீழ், நுகர்வோர் மின் வழங்கல் பெறுவதற்கு வசதி செய்வதோடு, பிற நுகர்வோர்களுக்கு மின் வழங்கலில் விருப்பத்தேர்வினை ஏற்பாடு செய்து கொடுப்பதும் இந்த திருத்தங்களின் நோக்கமாகும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை–600 008.
2020 செப்டம்பர் 17.

**சு. சின்னராஜலு,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**இருந்துவரும் வகைமுறை மற்றும் திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறையினைக் காட்டும் பட்டியல்**

**தமிழ்நாடு மின் பகிர்மான விதித்தொகுப்பு**

| *வரிசை எண்.* | *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை* |
|---|---|---|
| | *(1)* | *(2)* |
| 1. | **26.** மின்வழங்கல் வகைகள்<br><br>**(1)** நுகர்வோருக்கு மின் வழங்கல் கீழ்கண்ட வகைகளில் கிடைக்கும் :–<br><br>(a) (மின்சுமைகள் உள்ளடங்கலாக) 4000 வாட் அளவுக்கு மேற்படாத மொத்த இணைந்துள்ள சுமைகளுக்கு 2 கம்பிகளும், தறுவாய் நொதுமல் இடையில் 240 வோல்டுகளும் அமைந்த ஒற்றைத்தறுவாய் அமைப்பு ;<br><br>(b) 4000 வாட் அளவுக்கு மேற்பட்டுள்ள மொத்த இணைந்துள்ள சுமையும் 112 கிவா அளவுக்கு மேற்படாத மின்தேவையும் உள்ள சுமைகளுக்கு 4 கம்பிகளும், தறுவாய்களுக்கிடையில் 415 வோல்டுகளும், தறுவாய் நொதுமலுக் கிடையில் 240 வோல்டுகளும் அமைந்த முத்தறுவாய் அமைப்பு ;<br><br>(c) இணைந்துள்ள சுமை 4000 வாட் அளவுக்கு மேற்படாத போது, மேற்கூறிய இரண்டு வகையான அமைப்புகளில் ஏதேனுமொன்றை நுகர்வோர் தேர்ந்தெடுக்கலாம் ;<br><br>விளக்கம் : தாழ்வழுத்த நுகர்வோரின் மின்னிணைப்புச் சுமை அல்லது மின்தேவை 50 கிவாக்கு மேற்படுமானால், மின்நுகர்வோருக்கு தாழ்வழுத்த மின் மாற்றி மின்னளவீடு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும்.<br><br>(d) மின்வழங்கல் பகுதியில் இருந்துவரும் மின்னழுத்த அளவினைச் சார்ந்து 11 கிலோ வோல்ட்(KV) அல்லது 22 கிலோ வோல்டில் மூன்று கம்பிகளும் முத்தறுவாய் அமைப்பு, 3 மெகா வோல்ட் ஆம்பியர் (MVA) அல்லது, நேர்வுக்கேற்ப, 5 மெகாவோல்ட் ஆம்பியர் வரையிலான மின்தேவையளவிற்கு மின்சாரம் வழங்கப்படுதல் வேண்டும் எனினும், குறைந்த பட்ச மின்தேவை 63 கிலோ வோல்ட் ஆம்பியராக இருத்தல் வேண்டும் ;<br><br>(e) அந்தப்பகுதியில் மின்வழங்கல் 11 கிலோ வோல்ட் அமைப்பு முறையில் இருக்குமானால், மின்தேவை 3 மெகா வோல்ட் ஆம்பியருக்கு மேற்பட்டும் 10 மெகா வோல்ட் ஆம்பியர் வரையிலும் உள்ள போது 33 கிலோவோல்ட் அளவில் மின்சாரம் வழங்கப்படுதல் வேண்டும். மற்றும் அந்தப்பகுதியில் மின்வழங்கல் 22 கிலோ வோல்ட் அமைப்பு முறையில் இருக்குமானால், மின்தேவை 5 மெகா வோல்ட் ஆம்பியருக்கு மேற்பட்டும், 10 மெகா வோல்ட் ஆம்பியர் வரையிலும் உள்ளபோது, 33 கிலோ வோல்ட் அளவில் மின்சாரம் வழங்கப்படுதல் வேண்டும் ;<br><br>(f) மின் தேவையானது 10 மெகா வோல்ட் ஆம்பியர் அளவுக்கு மேலுமோ, மற்றும் 50 மெகா வோல்ட் ஆம்பியர் வரையிலுமோ உள்ள போது, மின்நுகர்வோருக்கு 110 கிலோ வோல்ட் அளவு மின்சாரம் வழங்கப்படுதல் வேண்டும் ; | **26.** மின் வழங்கல் வகைகள்<br><br>**(1)** "பின்வரும் வகைகளில் மின் வழங்கலை நுகர்வோர் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.<br><br>(a) ****<br><br>(b) 4000 வாட் அளவுக்கு மேற்பட்டுள்ள மொத்த இணைந்துள்ள சுமையும் ஆனால் 150 கிவாஅளவுக்கு மேற்படாத மின்தேவையும் உள்ள சுமைகளுக்கு மின் வழங்கலுக்கான 4 கம்பிகளும், முனைகளுக்கிடையில் 415 வோல்டுகளும், முனை மற்றும் நடுநிலைக்கிடையில் 240 வோல்டுகளும் அமைந்த மும்முனை அமைப்பு;<br><br>வரம்புரையாக, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு கூடுதலாகவும் ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது அது வரையிலும் தேவைப்படும் நுகர்வோர் பயன்படுத்தும் மின் வழங்கல் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்:<br><br>(i) உரிமதாரரால் மின் பகிர்மான மின்மாற்றி நிறுவுதலுக்கான இடம் நுகர்வோரால் இலவசமாக கொடுக்கப்படுதல் வேண்டும் மற்றும் மின் பகிர்மான மின்மாற்றி நிறுவுதலுக்கான அத்தகைய இடம் நுகர்வோரின் வளாகத்திற்குள்ளோ அல்லது நுகர்வோரின் வளாகத்திலிருந்து 50 மீட்டர் சுற்றளவுக்குள் ஒரு தனியார் நிலத்திலோ இருத்தல் வேண்டும். மின் பகிர்மான மின்மாற்றி நிறுவுதலுக்காக கொடுக்கப்பட்ட இடமானது ஆய்வு மற்றும் பராமரிப்பிற்கு எங்கு சாத்தியமோ அங்கு, நுழைவு வசதியுடன் இருத்தல் வேண்டும்.<br><br>(ii) முடிந்த வரையில், உரிமதாரர் மின் பகிர்மான மின்மாற்றியினை தாங்கி பிடித்துக்கொள்ளும் பக்கத்தட்டு (stud) /அடித்தளம் (plinth) அல்லது கற்காரை தூண் போன்ற ஏற்பாடு (concrete pillar like arrangement) முதலியன போன்று தனிப்பட்ட பிடித்துக்கொள்ளும் ஏற்பாட்டமைப்புடன் ஒற்றை கம்பம் மின் பகிர்மான மின்மாற்றியினை நுகர்வோருடைய வளாகத்தில் நிறுவுதல் வேண்டும். பிடித்துக்கொள்ளும் ஏற்பாட்டமைப்புகளுக்கான பணிகள் நுகர்வோரின் செலவில் நுகர்வோரால் செய்துமுடிக்கப்படுதல் வேண்டும்.<br><br>(iii) இணையான தளவாடங்கள் துணைப்பொருள்களுடன் மின் பகிர்மான மின்மாற்றி நிறுவுதல் அதாவது AB இணப்பி, HG உருகிழை, DT கட்டமைப்பு / மின்கம்பம் ஆகியவைகள் உரிமதாரரால் உரிமதாரரின் செலவில் செய்து முடிக்கப்படுதல் வேண்டும்.<br><br>(iv) மின் பகிர்மான மின்மாற்றியிலிருந்து நுகர்வோரின் மின்னளவி வரையில், மின் பகிர்மான மின்மாற்றி நுகர்வோரின் வளாகத்தில் நிறுவும்போது, உயரழுத்த மின்கம்பியின் பகுதி உள்ளடங்கலாக நிறுவல் அமைப்பு தொடர்பான பணிகளுக்கான செலவுகள் நுகர்வோரால் ஏற்கப்படுதல் வேண்டும். நுகர்வோரின் வளாகத்தில் மின்னாற்றல் வழங்கலுக்கு தேவைப்படும் மேனிலை மின்தொடர்கள்/புதைவடங்கள் இடுதல் போன்றவற்றை நிறுவுதலுக்கான பணிகள் அதிகார அமைப்பு மற்றும் ஆணையத்தால் அறிவிக்கை செய்யப்படலாகும் பாதுகாப்பு அளவுகோல்கள் மற்றும் மின்பகிர்மான விதித்தொகுப்பின் தொடர்புடைய ஒழுங்குமுறைவிதிகளுக்கு இணங்கியிருக்கும் வகையில் செய்து முடிக்கப்படலாம். |

| *வரிசை எண்.* | *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை* |
|---|---|---|
| | *(1)* | *(2)* |
| | (g) மின் தேவையானது 50 மெகா வோல்ட் ஆம்பியர் அளவுக்கு மேல் உள்ளபோது, மின்நுகர்வோருக்கு 230 கிலோ வோல்ட் மின்சாரம் வழங்கப்படுதல் வேண்டும்<br><br>(2) இருந்துவரும் மின்னிணைப்பு / மின்அமைப்பு (1) ஆம் உள்ஒழுங்குமுறை விதியில் குறிப்பிடப்பட்ட வகைமுறைகளுக்கிணங்க இல்லாதிருக்கும் நேர்வில், அத்தகைய மின்னிணைப்பு / மின் அமைப்பை உயர் / தாழ்வழுத்த நிலைக்கு மாற்றுதலானது இருந்துவரும் மின்தொடர் / மின்வடம், மின்மாற்றி, முதலியவற்றின் திறனளவு மற்றும் அத்தகைய மாற்றத்தினால் ஏற்படும் செலவு ஆதாயப் பகுப்பாய்வு ஆகியவற்றை உரியவாறு பரிசீலனை செய்து மின் பகிர்மான உரிமம்தாரர் மற்றும் மின்நுகர்வோருக்கிடையேயான பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையில் செய்யப்படலாம்.<br><br>**விளக்கம் :** இந்த உள்–ஒழுங்குமுறை விதியின்படி, இருந்துவரும் மின்னிணைப்பு என்பது (2) ஆம் உள்–ஒழுங்குமுறைவிதி நடைமுறைக்கு வந்த தேதியான 21–03–2012 அன்றோ அல்லது அதற்கு முன்போ கொடுக்கப்பட்ட மின்னிணைப்பு அல்லது மின்னிணைப்பில் கொடுக்கப்பட்ட கூடுதல் தேவை என்று பொருள்படும்.<br><br>(3) குறித்துரைக்கப்பட்ட அளவைவிட குறைந்தளவு மின்தேவைக்காக மின்நுகர்வோர் உயரளவு மின்னழுத்தத்தை தெரிவு செய்வாரானால், மின்நுகர்வோர், அத்தகைய உயரளவு மின்னழுத்தத்தில் மின்வழங்கலுக்காக உரிமம்தாரரால் செய்ய நேர்ந்த அதிகப்படியான செலவுகளை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும். | (v) ஒப்பளிக்கப்பட்ட மின்தேவைக்கான நிலையான/ மின்தேவை கட்டணங்கள் ஆணையத்தின் மின்கட்டணவீத ஆணைகளில் அவ்வப்போது அறிவிக்கை செய்யப்பட்டுள்ள உயரழுத்த வகை மின் வழங்கலுக்கு பொருந்தக்கூடிய மின்கட்டணவீதங்களில் இருத்தல் வேண்டும். அதாவது மின்தேவையினை கிவா அளவிலிருந்து கிவோ ஆ–க்கு மாற்றம் ஏதும் செய்யப்படாமல் கிவோ ஆ ஒன்றுக்கு அறிவிக்கை செய்யப்பட்டுள்ள வீதத்தினை கிவா அடிப்படையில் பின்பற்றப்படுதல் வேண்டும் உதாரணமாக, 130 கிவா மின்தேவைக்கு, நிலையான/ மின்தேவை கட்டணங்கள் உயரழுத்த வகைக்கு கிவோ ஆ ஒன்றுக்கு பொருந்தக்கூடிய மின்தேவைக் கட்டணங்கள் 130 x (பெருக்கல்) [ரூ.350/–] ஆக இருத்தல் வேண்டும். மின்னாற்றலுக்கான கட்டணங்கள் ஆணையத்தின் மின்கட்டணவீத ஆணைகளில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள தாழ்வழுத்த மின்கட்டண வீதங்களுக்கு பொருந்தக்கூடியனவாக இருத்தல் வேண்டும். மின் வழங்கல் 7 ஆம் ஒழுங்குமுறை விதியின் (7) ஆம் உள் ஒழுங்குமுறை விதியில் வகுத்துரைக்கப்பட்டுள்ள சூத்திரத்தின் படி மின் பகிர்மான மின்மாற்றியில் ஏற்படும் மின்னாற்றல் இழப்புகள் இத்தகைய தாழ்வழுத்த நுகர்வோர்களால் ஏற்கப்படுதல் வேண்டும்.<br><br>**விளக்கம்**–(i) இந்த திருத்தங்கள் அரசிதழில் அறிவிக்கை செய்யப்படுவதற்கு முன்னர் இருந்த தாழ்வழுத்த நுகர்வோர்கள் அதாவது இந்த ஒழுங்குமுறைவிதிகள் நடைமுறைக்கு வந்த நாளில் இருந்துவரும் நுகர்வோர்களின் மின்தேவை 112 கிவா அளவுக்கு மிகையாகவும் ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது சமமாகவும் அல்லது 112 கிவா அளவுக்கு மிகையாக கூடுதல் மின்தேவை தேவைப்படும் நுகர்வோர்கள் இந்த உள் ஒழுங்குமுறைவிதியின் (b) கூறின் வரம்புரையிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு தாழ்வழுத்த வகை மின் வழங்கலை பயன்படுத்த விருப்பத்தேர்வு செய்யலாம். (b) கூறின் வரம்புரையிலுள்ள நிபந்தனைகளுக்கு விருப்பத்தேர்வு செய்யாத 112 கிவா மின்தேவைக்கு மிகையாகும் தாழ்வழுத்த நுகர்வோர்கள், மின் வழங்கல் விதித்தொகுப்பின் 5 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (2) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின் 2(ii)(c)I கூறுக்கிணங்க மிகை மின்தேவைக் கட்டணங்கள் செலுத்துதல் வேண்டும்.<br><br>(ii) இந்த உள் ஒழுங்குமுறைவிதியின் (b)) கூறின் வரம்புரையிலுள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க இயலாத 112 கிவா அளவுக்கு மிகுதியான ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவான அல்லது சமமான மின்தேவை தேவைப்படும் புதிய நுகர்வோர்கள் உயரழுத்த வகை மின் வழங்கலை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். 112 கிவா அளவுக்கு மிகையாக கூடுதல் மின்தேவை தேவைப்படும் 112 கிவா அளவு மற்றும் அதற்கு குறைவாக ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை இருக்கும் இருந்துவரும் நுகர்வோர்களுக்கும் இவை பொருந்தக்கூடியதாகும்.''<br><br>(c) முதல் (g) வரை மாற்றம் ஏதும் இல்லை |

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை–600 008.
2020 செப்டம்பர் 17.

**சு. சின்னராஜலு,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிற்கான திருத்தம்.**

***(அறிவிக்கை எண். தமிஒஆ/வவி/7– 41 நாள் 09–06–2020)***

*(Lr.No.TNERC/Legal/1818/2020, D.No.816)*

No.VI(2)/45/2020.

**2003** ஆம் ஆண்டு மின்சாரச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **36/2003) 50** ஆம் சட்டப் பிரிவுடன் சேர்த்துப் படிக்கப்படும் **181** ஆம் சட்ட பிரிவினால் வழங்கப்பட்ட அதிகாரங்களையும் மற்றும் இதன்பொருட்டு அதனை இயல்விக்கும் அனைத்துப் பிற அதிகாரங்களையும் செலுத்தி, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், தமிழ்நாடு மின் வழங்கல் விதித் தொகுப்பிற்கு பின்வரும் திருத்தங்களை இதனால் செய்கிறது. மேற்சொன்ன சட்டத்தின் **181** ஆம் சட்டப்பிரிவின் **(3)** ஆம் உட்பிரிவினால் வேண்டுறுத்தப்பட்டவாறு அதன் வரைவு முன்னதாக வெளியிடப்பட்டுள்ளது.

**திருத்தங்கள்**

மேற்சொன்ன மின் வழங்கல் விதித்தொகுப்பில்,

1. **3** ஆம் ஒழுங்குமுறைவிதியில் **(1)** ஆம் உள் ஒழுங்குமுறைவிதியில்,

(a) 'நுகர்வோருக்கு மின்வழங்கல் கீழ்கண்ட வகைகளில் கிடைக்கும்' என்ற சொற்றொடருக்குப் பதிலாக பின்வருவன மாற்றியமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன :–

1. ''பின்வரும் வகைகளில் மின் வழங்கலை நுகர்வோர் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்''.

(b) கூறு(b)க்கு பதிலாக, பின்வரும் கூறு மாற்றியமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

'' (b) 4000 வாட் அளவுக்கு மேற்பட்டுள்ள மொத்த இணைந்துள்ள சுமையும் ஆனால் **150** கிவா அளவுக்கு மேற்படாத மின்தேவையும் உள்ள சுமைகளுக்கு மின் வழங்கலுக்கான **4** கம்பிகளும், முனைகளுக்கிடையில் **415** வோல்டுகளும், முனை மற்றும் நடுநிலைக்கிடையில் **240** வோல்டுகளும் அமைந்த மும்முனை அமைப்பு;

வரம்புரையாக, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை **112** கிவா அளவுக்கு கூடுதலாகவும் ஆனால் **150** கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது அதுவரையிலும் மின் வழங்கல் தேவைப்படும் நுகர்வோர் பயன்படுத்தும் மின் வழங்கல் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும்:

(i) உரிமதாரரால் மின் பகிர்மான மின்மாற்றி நிறுவுதலுக்கான இடம் நுகர்வோரால் இலவசமாக கொடுக்கப்படுதல் வேண்டும் மற்றும் மின் பகிர்மான மின்மாற்றி நிறுவுதலுக்கான அத்தகைய இடம் நுகர்வோரின் வளாகத்திற்குள்ளோ அல்லது நுகர்வோரின் வளாகத்திலிருந்து **50** மீட்டர் சுற்றளவுக்குள் ஒரு தனியார் நிலத்திலோ இருத்தல் வேண்டும். மின் பகிர்மான மின்மாற்றி நிறுவுதலுக்காக கொடுக்கப்பட்ட இடமானது ஆய்வு மற்றும் பராமரிப்பிற்கு தடையற்ற நுழைவு வசதியுடன் இருத்தல் வேண்டும்.

(ii) எங்கு சாத்தியமோ அங்கு, உரிமதாரர் மின் பகிர்மான மின்மாற்றியினை தாங்கி பிடித்துக்கொள்ளும் பக்கத்தட்டு (stud) / அடித்தளம் (plinth) அல்லது கற்காரை தூண் போன்ற ஏற்பாடு (concrete pillar like arrangement) முதலியன போன்று தனிப்பட்ட பிடித்துக்கொள்ளும் ஏற்பாட்டமைப்புடனான ஒற்றை கம்பம் மின் பகிர்மான மின்மாற்றியினை நுகர்வோருடைய வளாகத்தில் நிறுவுதல் வேண்டும். பிடித்துக்கொள்ளும் ஏற்பாட்டமைப்புகளுக்கான பணிகள் நுகர்வோரின் செலவில் நுகர்வோரால் செய்துமுடிக்கப்படுதல் வேண்டும்.

(iii) இணையான தளவாடங்கள் / துணைப்பொருள்களுடன் மின்பகிர்மான மின்மாற்றி நிறுவுதல் அதாவது, AB இணைப்பி, HG உருகிழை, DT கட்டமைப்பு / மின் கம்பம் ஆகியவைகள் உரிமதாரரால் உரிமதாரரின் செலவில் செய்து முடிக்கப்படுதல் வேண்டும்.

(iv) மின் பகிர்மான மின்மாற்றியிலிருந்து நுகர்வோரின் மின்னளவி வரையில், மின் பகிர்மான மின்மாற்றி நுகர்வோரின் வளாகத்தில் நிறுவும்போது உயரழுத்த மின்கம்பியின் பகுதி உள்ளடங்கலாக நிறுவல் அமைப்பு தொடர்பான பணிகளுக்கான செலவுகள் நுகர்வோரால் ஏற்கப்படுதல் வேண்டும். நுகர்வோரின் வளாகத்தில் மின்னாற்றல் வழங்கலுக்கு தேவைப்படும் மேனிலை மின்தொடர்கள்/புதைவடங்கள் இடுதல் போன்றவற்றை நிறுவுதலுக்கான பணிகள் அதிகார அமைப்பு மற்றும் ஆணையத்தால் அறிவிக்கை செய்யப்படலாகும் பாதுகாப்பு அளவுகோல்கள் மற்றும் மின் பகிர்மான விதித்தொகுப்பின் தொடர்புடைய ஒழுங்குமுறைவிதிகளுக்கு இணங்கியிருக்கும் வகையில் செய்து முடிக்கப்படலாம்.

(v) ஒப்பளிக்கப்பட்ட மின்தேவைக்கான நிலையான/ மின்தேவைக் கட்டணங்கள் ஆணையத்தின் மின்கட்டணவீத ஆணைகளில் அவ்வப்போது அறிவிக்கை செய்யப்பட்டுள்ள உயரழுத்த வகை மின் வழங்கலுக்கு பொருந்தக்கூடிய மின்கட்டணவீதங்களில் இருத்தல் வேண்டும். அதாவது மின்தேவையினை கிவா அளவிலிருந்து கிவோ ஆ–க்கு மாற்றம் ஏதும் செய்யப்படாமல் கிவோ ஆ ஒன்றுக்கு அறிவிக்கை செய்யப்பட்டுள்ள வீதத்தினை கிவா அடிப்படையில் பின்பற்றப்படுதல் வேண்டும் உதாரணமாக, 130 கிவா மின்தேவைக்கு, நிலையான/மின்தேவை கட்டணங்கள் உயரழுத்த வகைக்கு கிவோ ஆ ஒன்றுக்கு பொருந்தக்கூடிய மின்தேவைக் கட்டணங்கள் 130 பெருக்கல் [ரூ.350/–] ஆக இருத்தல் வேண்டும். மின்னாற்றலுக்கான கட்டணங்கள் ஆணையத்தின் மின்கட்டணவீத ஆணைகளில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள தாழ்வழுத்த மின்கட்டண வீதங்களுக்கு பொருந்தக்கூடியனவாக இருத்தல் வேண்டும். 7 ஆம் ஒழுங்குமுறை விதியின் (7) ஆம் உள் ஒழுங்குமுறை விதியில் வகுத்துரைக்கப்பட்டுள்ள சூத்திரத்தின்படி மின் பகிர்மான மின்மாற்றியில் ஏற்படும் மின்னாற்றல் இழப்புகள் இத்தகைய தாழ்வழுத்த நுகர்வோர்களால் ஏற்கப்படுதல் வேண்டும்.

விளக்கம்–(i) இந்த திருத்தங்கள் அரசிதழில் அறிவிக்கை செய்யப்படுவதற்கு முன்னர் இருந்த தாழ்வழுத்த நுகர்வோர்கள் அதாவது இந்த ஒழுங்குமுறைவிதிகள் நடைமுறைக்கு வந்த நாளில் இருந்துவரும் நுகர்வோர்களின் மின்தேவை 112 கிவா அளவுக்கு மிகையாகவும் ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது சமமாகவும் அல்லது 112 கிவா அளவுக்கு மிகையாக கூடுதல் மின்தேவை தேவைப்படும் நுகர்வோர்கள் இந்த உள் ஒழுங்குமுறை விதியின் (b) கூறின் வரம்புரையிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு தாழ்வழுத்த வகை மின் வழங்கலை பயன்படுத்த விருப்பத்தேர்வு செய்யலாம். (b) கூறின் வரம்புரையிலுள்ள நிபந்தனைகளுக்கு விருப்பத்தேர்வு செய்யாத 112 கிவா மின்தேவைக்கு மிகையாகும் இருந்துவரும் தாழ்வழுத்த நுகர்வோர்கள், இந்த விதித்தொகுப்பின் 5 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (2) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின்

(ii)(c)I கூறுக்கிணங்க மிகை மின்தேவை கட்டணங்கள் செலுத்துதல் வேண்டும்.

(ii) இந்த உள் ஒழுங்குமுறைவிதியின் (b) கூறின் வரம்புரையிலுள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க இயலாத 112 கிவா அளவுக்கு மிகுதியான ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவான அல்லது சமமான மின்தேவை தேவைப்படும் புதிய நுகர்வோர்கள் உயரழுத்த வகை மின் வழங்கலை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். 112 கிவா அளவுக்கு மிகையாக கூடுதல் மின்தேவை தேவைப்படும் 112 கிவா அளவு மற்றும் அதற்கு குறைவாக ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையில் இருக்கும் நுகர்வோர்களுக்கும் இவை பொருந்தக்கூடியதாகும்.''

2. 5 ஆம் ஒழுங்குமுறைவிதியில் (2) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியில், (ii)(c)கூறில், (a) உட்கூறுகள் (I) மற்றும் (II)க்குப்பதிலாக, பின்வருவன மாற்றியமைக்கப்படுதல் வேண்டும்:

(I) ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு குறைவாகவும் மற்றும் 112 கிவா வரையிலும் இருக்கும்போது:

(A) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு மிகையாகாமல் இருக்கும்போது, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையைவிட மிகையாகும் ஒவ்வொரு கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும், மொத்த மின்னாற்றல் கட்டணங்களில் 1 விழுக்காடு வீதம்

விளக்கம்: 'மொத்த மின்னாற்றல் கட்டணங்கள்' என்ற சொற்றொடர் 'மின்னாற்றல் வழங்கப்பட்டமைக்கான கட்டணங்கள்' என்ற சொற்றொடருக்கான அதே பொருளைக் கொண்டுள்ளதாக இருத்தல் வேண்டும். இது நிலையான / மின்தேவைக் கட்டணங்கள் மற்றும் மின்னாற்றல் கட்டணங்கள் ஆகிய இரண்டினையும் உள்ளடக்கும்.

(B) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு மேற்படுகிறவிடத்து, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவைக்கு மிகையான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும்:–

– 112 கிவா வரை ஒவ்வொரு கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணங்களில் 1 விழுக்காடு வீதம்

– மற்றும் 112 கிவா அளவுக்கு மிகையான முதல் இரண்டு நிகழ்வுகளுக்கு, ஒவ்வொரு கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 1.5 விழுக்காடு வீதம்

– மற்றும் 112 கிவா அளவுக்கு மிகையான மூன்றாவது நிகழ்வுக்கு, ஒவ்வொரு கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 3 விழுக்காடு வீதம்

– மற்றும் அதன்பின்பு, அதாவது 112 கிவா அளவுக்கு மிகையான நான்காவது மற்றும் பிந்திய நிகழ்வுகளுக்கு ஒவ்வொரு கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 10 விழுக்காடு வீதம் ;–

“(II) ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு அதிகமாகவும் ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது சமமாகவும் இருக்கும்போது:

(A) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 150 கிவா அளவுக்கு மிகையாகாமல் இருக்கும்போது, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையைவிட மிகுதியான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணங்களில் 1 விழுக்காடு வீதம்.

இந்த விதித்தொகுப்பின் 3 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (I) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின் (b) கூறின் வரம்புரையின்படி ‘வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணங்கள்’ என்பது நிலையான / மின்தேவைக் கட்டணங்கள் மற்றும் மின்னாற்றலுக்கான கட்டணங்கள் ஆகும்.

(B) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 150 கிவா அளவுக்கு மிகையாகும்போது, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவைக்கு மிகையான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும்:–

– 150 கிவா வரையிலும் வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணங்களின் 1 விழுக்காடு வீதம்

– மற்றும் முதல் இரண்டு நிகழ்வுகளுக்கு, 150 கிவா அளவுக்குக் கூடுதலான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 1.5 விழுக்காடு வீதம்

– மற்றும் மூன்றாவது நிகழ்வுக்கு, 150 கிவா அளவுக்குக் கூடுதலான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 3 விழுக்காடு வீதம்

– மற்றும் அதன்பின்பு, அதாவது நான்காவது நிகழ்வு மற்றும் பிந்திய நிகழ்வுக்கு 150 கிவா அளவுக்குக் கூடுதலான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 10 விழுக்காடு வீதம்

(b) உட் கூறு IIIக்குப் பதிலாக, பின்வரும் கூறு மாற்றியமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

“(III) 112 கிவா மற்றும் அதற்கு குறைவான ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையுடைய நுகர்வோரின் ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையை திருத்தியமைத்தல், 112 கிவா அளவுக்குக் கூடுதலான தாழ்வழுத்த வகை ஆனால் 150 கிவா அளவுக்குக் குறைவான அல்லது அதற்கு சமமான உயரழுத்த வகைக்கு மாற்றுதல்:

இரண்டாவது மற்றும் பிந்திய நிகழ்வுகளில் பதிவுசெய்யப்பட்ட மின்தேவை ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையைவிட மிகையாகும் 112 கிவா மற்றும் அதற்கு குறைவாக ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை அளவுடைய நுகர்வோருக்கு, –

(A) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு மிகையாகாத நிகழ்வில், நுகர்வோருக்கு தகவல் அளித்துவிட்டு இருந்துவரும் மின்சுமை ஒப்பளிப்பு இரண்டாவது நிகழ்விலிருந்து ஒரு மாதத்திற்குள் பதிவுசெய்யப்பட்ட பேரளவு மின்தேவையின் அளவுக்கு மாற்றியமைக்கப்பட்டு மற்றும் கூடுதல் மின்சுமைக்கு பொருந்தக்கூடிய தொடர்புடைய கட்டணங்கள் அடுத்த மின்கட்டண பட்டியலில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(B) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு அதிகமாக ஆனால் 150 கிவா அளவுக்குள் அல்லது அதற்கு சமமாக இருக்கும் நிகழ்வுகளில் (3) ஆம் ஒழுங்குமுறைவிதியின் (1) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின் (b) கூறின் வரம்புரையிலுள்ள நிபந்தனைகளை ஏற்பதற்குட்பட்டு பொருந்தக்கூடிய தொடர்புடைய அனைத்து கட்டணங்களையும் செலுத்தும் நேர்வில், இருந்துவரும் மின்சுமை ஒப்பளிப்பு பதிவுசெய்யப்பட்ட பேரளவு மட்டம் வரையிலும் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். எனினும், 3 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (1) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின் (b) கூறின் வரம்புரையின் கீழ், நுகர்வோர் தாழ்வழுத்த வகை வரம்பான 150 கிவா அளவுக்கு மாறுதலுக்கு விருப்பத்தேர்வு செய்யவில்லையெனில், நுகர்வோருக்கு தகவல் அளித்துவிட்டு, இருந்துவரும் மின்சுமை ஒப்பளிப்பு இரண்டாவது நிகழ்விலிருந்து ஒரு மாதத்திற்குள் 112 கிவா அளவிற்கு மாற்றியமைக்கப்படுதல் வேண்டும் மற்றும் கூடுதல் மின்சுமைக்கு பொருந்தக்கூடிய தொடர்புடைய அனைத்து கட்டணங்களும் அடுத்த மின்கட்டண பட்டியலில் சேர்க்கப்படுதல் வேண்டும்; ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையான 112 கிவா அளவைவிட பதிவு செய்யப்பட்ட மின்தேவை மிகுதியாகும் மூன்றாவது மற்றும் அடுத்துவரும்

நிகழ்வுகளுக்கு பதிவு செய்யப்பட்ட மின்தேவை அளவில் உயரழுத்த மின்னிணைப்புக்கு செலுத்தப்படவேண்டிய தொடர்புடைய அனைத்து கட்டணங்களையும் குறிப்பிட்டு தாழ்வழுத்த மின்னிணைப்பினை உயரழுத்த மின்னிணைப்பாக மாற்றுவதற்கான ஒருமாத அறிவிப்பினை உரிமதாரர் வெளியிடுதல் வேண்டும்.

(c) மாற்றியமைக்கப்பட்டவாறு (III)ஆம் உட்கூறுக்கு பின்னர், பின்வருவன புகுத்தப்படுதல் வேண்டும், அவையாவன:–

“(iv) 112 கிவா அளவுக்குக் கூடுதலாக ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது சமமாகவும் உள்ள நுகர்வோருக்கான ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை திருத்தியமைத்தல், உயரழுத்த வகைக்கு மாற்றுதல்:

112 கிவா அளவுக்குக் கூடுதலாக ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது சமமாகவும் உள்ள நுகர்வோருக்கு பதிவுசெய்யப்பட்ட மின்தேவை ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையைவிட மிகையாகும் இரண்டாவது மற்றும் அடுத்துவரும் நிகழ்வுகளில்

(A) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 150 கிவா அளவுக்கு மிகையாகாத நிகழ்வில், நுகர்வோருக்கு தகவல் அளித்துவிட்டு, இருந்துவரும் மின்சுமை ஒப்பளிப்பு இரண்டாவது நிகழ்விலிருந்து ஒரு மாதத்திற்குள் பதிவுசெய்யப்பட்ட பேரளவு மட்டம் வரை மாற்றியமைக்கப்பட்டு மற்றும் கூடுதல் மின்சுமைக்கு பொருந்தக்கூடிய தொடர்புடைய கட்டணங்கள் அடுத்த மின்கட்டண பட்டியலில் சேர்க்கப்படுதல் வேண்டும்.

(B) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 150 கிவா அளவுக்கு மிகையாகும் நிகழ்வில், நுகர்வோருக்கு தகவல் அளித்துவிட்டு, இருந்துவரும் மின்சுமை ஒப்பளிப்பு இரண்டாவது நிகழ்விலிருந்து ஒரு மாதத்திற்குள் 150 கிவா மட்டம் வரை மாற்றியமைக்கப்பட்டு மற்றும் கூடுதல் மின்சுமைக்கு பொருந்தக்கூடிய தொடர்புடைய கட்டணங்கள் அடுத்த மினகட்டண பட்டியலில் சேர்க்கப்படுதல் வேண்டும். எனினும், பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 150 கிவா அளவுக்கு மிகையாகும் மூன்றாவது அல்லது கூடுதலான எண்ணிக்கையிலான நிகழ்வுகளில், பதிவுசெய்யப்பட்ட மின்தேவை அளவில் உயரழுத்த மின்னிணைப்புக்கு செலுத்தப்பட வேண்டிய தொடர்புடைய அனைத்து கட்டணங்களையும் குறிப்பிட்டு தாழ்வழுத்த மின்னிணைப்பினை உயரழுத்த மின்னிணைப்பாக மாற்றுவதற்கான ஒருமாத அறிவிப்பினை உரிமதாரர் வெளியிடுதல் வேண்டும்.”

3. 5 ஆம் ஒழுங்குமுறைவிதியில், (2) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியில், (iii) ஆம் கூறுக்குப் பதிலாக, பின்வருவன மாற்றியமைக்கப்படுதல் வேண்டும், அவையாவன:–

“(iii) தற்காலிக மின் வழங்கல் இனங்களில், உயரழுத்த / தாழ்வழுத்த மின் வழங்கலுக்கான மிகை மின்தேவைக் கட்டணங்கள், இந்த ஒழுங்குமுறைவிதியின் (i) மற்றும் (ii) ஆம் கூறுகளில் குறித்துரைக்கப்பட்டவாறு இருக்கலாம்”.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை 600 008,
2020 செப்டம்பர் 17.

**சு. சின்னராஜலு,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**விளக்கவுரை**

உயரழுத்த / தாழ்வழுத்த மின்தொடர் விகிதத்தை மேம்படுத்துவதற்கும் தொழில் கொள்கை மற்றும் முன்னேற்றத் துறையின் இலகுவாக தொழில் செய்தல் திட்டத்தின் கீழ், நுகர்வோர் மின் வழங்கல் பெறுவதற்கு வசதி செய்வதோடு பிற நுகர்வோர்களுக்கு மின் வழங்கலில் விருப்பத்தேர்வினை ஏற்பாடு செய்து கொடுப்பதும் இந்த திருத்தங்களின் நோக்கமாகும்.

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை 600 008,
2020 செப்டம்பர் 17.

**சு. சின்னராஜலு,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

**இருந்துவரும் வகைமுறை மற்றும் திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறையினைக் காட்டும் பட்டியல்**
**தமிழ்நாடு மின் வழங்கல் விதித்தொகுப்பு**

| *வரிசை எண்.* | *இருந்துவரும் வகைமுறை* | *திருத்தத்தினை உள்ளடக்கிய வகைமுறை* |
|---|---|---|
| | *(1)* | *(2)* |
| | 3.மின்வழங்கல் வகைகள்:– | 3.மின் வழங்கல் வகைகள் |
| | (1) நுகர்வோருக்கு மின்வழங்கல் கீழ்கண்ட வகைகளில் கிடைக்கும்:– | (1) பின்வரும் வகைகளில் மின் வழங்கலை நுகர்வோர் பயன்படுத்திக் கொள்ளுதல் வேண்டும் |
| | (a) (மின்சுமைகள் உள்ளடங்கலாக) 4000 வாட் அளவுக்கு மேற்படாத மொத்த இணைந்துள்ள சுமைகளுக்கு 2 கம்பிகளும், தறுவாய் நொதுமல் இடையில் 240 வோல்டுகளும் அமைந்த ஒற்றைத்தறுவாய் அமைப்பு; | (a) *** |
| | (b) 4000 வாட் அளவுக்கு மேற்பட்டுள்ள மொத்த இணைந்துள்ள சுமையும் 112 கிலோ வாட் அளவுக்கு மேற்படாத மின்தேவையும் உள்ள சுமைகளுக்கு 4 கம்பிகளும், தறுவாய்களுக்கிடையில் 415 வோல்டுகளும் தறுவாய் நொதுமலுக் கிடையில் 240 வோல்டுகளும் அமைந்த முத்தறுவாய் அமைப்பு | (b) 4000 வாட் அளவுக்கு மேற்பட்டுள்ள மொத்த இணைந்துள்ள சுமையும் 150 கிவா அளவுக்கு மேற்படாத மின்தேவையும் உள்ள சுமைகளுக்கு மின் வழங்கலுக்கான 4 கம்பிகளும், முனைகளுக்கிடையில் 415 வோல்டுகளும், முனை மற்றும் நடுநிலைக்கிடையில் 240 வோல்டுகளும் அமைந்த மும்முனை அமைப்பு; |
| | (c) இணைந்துள்ள சுமை 4000 வாட் அளவுக்கு மேற்படாத போது, மேற்கூறிய இரண்டு வகையான அமைப்புகளில் ஏதேனுமொன்றை நுகர்வோர் தேர்ந்தெடுக்கலாம்; | வரம்புரையாக, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு கூடுதலாகவும் ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது அது வரையிலும் தேவைப்படும் நுகர்வோர் பயன்படுத்தும் மின் வழங்கல் பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருத்தல் வேண்டும் |
| | **விளக்கம்** : தாழ்வழுத்த நுகர்வோரின் மின்னிணைப்புச் சுமை அல்லது மின் தேவை 50 கிலோ வாட்டுக்கு மேற்படுமானால், மின்நுகர்வோருக்கு தாழ்வழுத்த மின் மாற்றி மின்னளவீடு ஏற்பாடு செய்யப்படுதல் வேண்டும். | (i)உரிமதாரரால் மின் பகிர்மான மின்மாற்றி அமைப்பதற்கான இடம் நுகர்வோரால் இலவசமாக கொடுக்கப்படுதல் வேண்டும் மற்றும் மின் பகிர்மான மின்மாற்றி அமைப்பதற்கான அத்தகைய இடம் நுகர்வோரின் வளாகத்திற்குள்ளோ அல்லது நுகர்வோரின் வளாகத்திலிருந்து 50 மீட்டர் சுற்றளவுக்குள் ஒரு தனியார் நிலத்திலோ இருத்தல் வேண்டும். மின் பகிர்மான மின்மாற்றி நிறுவுதலுக்காக கொடுக்கப்பட்ட இடமானது ஆய்வு மற்றும் பராமரிப்பிற்கு தடையற்ற நுழைவு வசதியுடன் இருத்தல் வேண்டும். |
| | (d) மின்வழங்கல் பகுதியில் இருந்துவரும் மின்னழுத்த அளவினைச் சார்ந்து 11 கிலோ வோல்ட் (KV) அல்லது 22 கிலோ வோல்டில் மூன்று கம்பிகளும் முத்தறுவாய் அமைப்பு, 3 மெகா வோல்ட் ஆம்பியர் (MVA) அல்லது, நேர்வுக்கேற்ப, 5 மெகாவோல்ட் ஆம்பியர் வரையிலான மின்தேவையளவிற்கு மின்சாரம் வழங்கப்படுதல் வேண்டும். எனினும் குறைந்தபட்ச மின்தேவை 63 கிலோ வோல்ட் ஆம்பியராக இருத்தல் வேண்டும்; | (ii) எங்கு சாத்தியமோ அங்கு, உரிமதாரர் மின் பகிர்மான மின்மாற்றியினை தாங்கி பிடித்துக்கொள்ளும் பக்கத்தட்டு (stud) / அடித்தளம் (plinth) அல்லது கற்காரை தூண் போன்ற ஏற்பாடு (concrete pillar like arrangement) முதலியன போன்று தனிப்பட்ட பிடித்துக்கொள்ளும் ஏற்பாட்டமைப்பு ஒற்றை கம்பம் மின் பகிர்மான மின்மாற்றியினை நுகர்வோருடைய வளாகத்தில் நிறுவுதல் வேண்டும். பிடித்துக்கொள்ளும் ஏற்பாட்டமைப்புக்கான பணிகள் நுகர்வோரின் செலவில் நுகர்வோரால் செய்து முடிக்கப்படுதல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| | (e) அந்தப்பகுதியில் மின்வழங்கல் 11 கிலோ வோல்ட் அமைப்பு முறையில் இருக்குமானால், மின்தேவை 3 மெகாவோல்ட் ஆம்பியருக்கு மேற்பட்டும் 10 மெகா வோல்ட் ஆம்பியர் வரையிலும் உள்ளபோது 33 கிலோ வோல்ட் அளவில் மின்சாரம் வழங்கப்படுதல் வேண்டும் மற்றும் அந்தப்பகுதியில் மின்வழங்கல் 22 கிலோ வோல்ட் அமைப்புமுறையில் இருக்குமானால், மின்தேவை 5 மெகா வோல்ட் ஆம்பியருக்கு மேற்பட்டும், 10 மெகா வோல்ட் ஆம்பியர் வரையிலும் உள்ளபோது, 33 கிலோ வோல்ட் அளவில் மின்சாரம் வழங்கப்படுதல் வேண்டும்; | (iii) இணையான தளவாடங்கள் / துணைப் பொருட்களுடன் மின் பகிர்மான மின்மாற்றி நிறுவுதல் அதாவது AB இணைப்பி, HG உருகிழை, DT கட்டமைப்பு / மின்கம்பம் ஆகியவைகள் உரிமதாரரால் உரிமதாரரின்செலவில் செய்து முடிக்கப்படுதல் வேண்டும்.<br>(iv) மின் பகிர்மான மின்மாற்றியிலிருந்து நுகர்வோரின் மின்னளவி வரையில், மின் பகிர்மான மின்மாற்றி நுகர்வோரின் வளாகத்தில் நிறுவும்போது உயரழுத்த மின் கம்பியின் பகுதி உள்ளடங்கலாக, நிறுவல் அமைப்பு தொடர்பான பணிகளுக்கான செலவுகள் நுகர்வோரால் ஏற்கப்படுதல் வேண்டும். நுகர்வோரின் வளாகத்தில் மின்னாற்றல் வழங்கலுக்கு தேவைப்படும் மேனிலை மின் தொடர்கள்/புதைவடங்கள் இடுதல் போன்றவற்றை நிறுவுதலுக்கான பணிகள் அதிகார அமைப்பு மற்றும் ஆணையத்தால் அறிவிக்கை செய்யப்படலாகும் பாதுகாப்பு அளவுகோல்கள் மற்றும் மின் பகிர்மான விதித்தொகுப்பின் தொடர்புடைய ஒழுங்குமுறைவிதிகளுக்கு இணங்கியிருக்கும் வகையில் செய்து முடிக்கப்படலாம்.<br>(v) ஒப்பளிக்கப்பட்ட மின்தேவைக்கான நிலையான/ மின்தேவைக் கட்டணங்கள் ஆணையத்தின் மின்கட்டணவீத ஆணைகளில் அவ்வப்போது அறிவிக்கை செய்யப்பட்டுள்ள உயரழுத்த வகை மின் வழங்கலுக்கு பொருந்தக்கூடிய மின்கட்டணவீதங்களில் இருத்தல் வேண்டும். அதாவது மின்தேவையினை கிவா அளவிலிருந்து கிவோ ஆ–க்கு மாற்றம் ஏதும் செய்யப்படாமல் கிவோ ஆ ஒன்றுக்கு அறிவிக்கை செய்யப்பட்டுள்ள வீதத்தினை கிவா அடிப்படையில் பின்பற்றப்படுதல் வேண்டும். உதாரணமாக, 130 கிவா ஒப்பளிக்கப்பட்ட மின்தேவைக்கு, நிலையான/மின்தேவை கட்டணங்கள் உயரழுத்த வகைக்கு கிவோ ஆ ஒன்றுக்கு பொருந்தக்கூடிய மின்தேவைக் கட்டணங்கள் 130 பெருக்கல் [ரூ.350/–] ஆக இருத்தல் வேண்டும் மின்னாற்றலுக்கான கட்டணங்கள் ஆணையத்தின் மின்கட்டணவீத ஆணைகளில் அறிவிக்கை செய்யப்பட்டுள்ள தாழ்வழுத்த மின்கட்டண வீதங்களுக்கு பொருந்தக்கூடியனவாக இருத்தல் வேண்டும். 7 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (7) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியில் வகுத்துரைக்கப்பட்டுள்ள சூத்திரத்தின்படி மின் பகிர்மான மின்மாற்றியில் ஏற்படும் மின்னாற்றல் இழப்புகள் இத்தகைய தாழ்வழுத்த நுகர்வோர்களால் ஏற்கப்படுதல் வேண்டும். |
| | (f) மின் தேவையானது 10 மெகா வோல்ட் ஆம்பியர் அளவுக்கு மேலுமோ, மற்றும் 50 மெகா வோல்ட் ஆம்பியர் வரையிலுமோ உள்ள போது, மின்நுகர்வோருக்கு 110 கிலோ வோல்ட் அளவு மின்சாரம் வழங்கப்படுதல் வேண்டும்; | |
| | (g) மின் தேவையானது 50 மெகா வோல்ட் ஆம்பியர் அளவுக்கு மேல் உள்ளபோது, மின்நுகர்வோருக்கு 230 கிலோவோல்ட் மின்சாரம் வழங்கப்படுதல் வேண்டும். | |
| | (2) இருந்துவரும் மின்னிணைப்பு / மின் அமைப்பு (1) ஆம் உள் ஒழுங்குமுறை விதியில் குறிப்பிடப்பட்ட வகைமுறைகளுக்கிணங்க இல்லாதிருக்கும் நேர்வில், அத்தகைய மின்னிணைப்பு / மின் அமைப்பை உயர் / தாழ்வழுத்த நிலைக்கு மாற்றுதலானது இருந்துவரும் மின்தொடர் / மின்வடம், மின்மாற்றி, முதலியவற்றின் திறனளவு மற்றும் அத்தகைய மாற்றத்தினால் ஏற்படும் செலவு ஆதாயப் பகுப்பாய்வு ஆகியவற்றை உரியவாறு பரிசீலனை செய்து மின்பகிர்மான உரிமம்தாரர் மற்றும் மின்நுகர்வோருக்கிடையேயான பரஸ்பர சம்மதத்தின் அடிப்படையில் செய்யப்படலாம். | |
| | **விளக்கம்:–** இந்த உள் – ஒழுங்குமுறை விதியின்படி, “இருந்துவரும் மின்னிணைப்பு” என்பது (2) ஆம் உள்– ஒழுங்குமுறைவிதி நடைமுறைக்கு வந்த தேதியான 21–03–2012 அன்றோ அல்லது அதற்கு முன்போ கொடுக்கப்பட்ட மின்னிணைப்பு அல்லது மின்னிணைப்பில் கொடுக்கப்பட்ட கூடுதல் தேவை என்று பொருள்படும். | |
| | (3) குறித்துரைக்கப்பட்ட அளவைவிட குறைந்தளவு மின்தேவைக்காக, மின்நுகர்வோர் உயரளவு மின்னழுத்தத்தை தெரிவு செய்வாரானால், மின்நுகர்வோர் அத்தகைய உயரளவு மின்னழுத்தத்தில் மின்வழங்கலுக்காக உரிமம் தாரரால் செய்ய நேர்ந்த அதிகப்படியான செலவுகளை ஏற்றுக்கொள்ளுதல் வேண்டும், | விளக்கம் – (i) இந்த திருத்தங்கள் ***அரசிதழில்*** அறிவிக்கை செய்யப்படுவதற்கு முன்னர் இருந்த தாழ்வழுத்த நுகர்வோர்கள் அதாவது இந்த ஒழுங்குமுறைவிதிகள் நடைமுறைக்கு வந்த நாளில் இருந்துவரும் நுகர்வோர்களின் மின்தேவை 112 கிவா அளவுக்கு மிகையாகவும் ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது சமமாகவும் அல்லது 112 கிவா அளவுக்கு மிகையாக கூடுதல் மின்தேவை தேவைப்படும் நுகர்வோர்கள் இந்த உள் |

| | | |
|---|---|---|
| | | ஒழுங்குமுறைவிதியின் (b) கூறின் வரம்புரையிலுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு தாழ்வழுத்த வகை மின் வழங்கலை பயன்படுத்த விருப்பத்தேர்வு செய்யலாம். (b) கூறின் வரம்புரையிலுள்ள நிபந்தனைகளுக்கு விருப்பத்தேர்வு செய்யாத 112 கிவா மின்தேவைக்கு மிகையாகும் இருந்துவரும் தாழ்வழுத்த நுகர்வோர்கள், இந்த விதித்தொகுப்பின் 5 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (2) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின் (ii)(c)I கூறுக்கிணங்க மிகை மின்தேவை கட்டணங்கள் செலுத்துதல் வேண்டும்.<br>(ii) இந்த உள் ஒழுங்குமுறைவிதியின் (b) கூறின் வரம்புரையிலுள்ள நிபந்தனைகளை கடைப்பிடிக்க இயலாத 112 கிவா அளவுக்கு மிகுதியான ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவான அல்லது சமமான மின்தேவை தேவைப்படும் புதிய நுகர்வோர்கள் உயரழுத்த வகை மின் வழங்கலை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். 112 கிவா அளவுக்கு மிகையாக கூடுதல் மின்தேவை தேவைப்படும் 112 கிவா அளவு மற்றும் அதற்கு குறைவாக ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையில் இருக்கும் நுகர்வோர்களுக்கும் இவை பொருந்தக்கூடியதாகும்.''<br>(c) முதல் (g) வரை மாற்றம் ஏதும் இல்லை |
| | 5(2) மிகை மின்தேவைக் கட்டணம் | 5(2) மிகை மின்தேவைக் கட்டணம் |
| | (i) ...... | (i) ...... |
| | (ii) (c) மேலே துணைப்பிரிவுகள் (a) (b) ஆகியவற்றில் குறிப்பிட்டவற்றைத் தவிர பிற தா. அ மின்னிணைப்புகளுக்கு, ஒப்பந்த மின் தேவை 18.6 கிவா (25 பதி) அளவுக்கும் அதிகமாகவும் ஒப்பந்த மின்தேவை 18.6 கிவா (25 பதி) அளவுக்குக் குறைந்திருந்தாலும் மின் தேவைப் பதிவு வசதி பெற்றுள்ளவர்களுக்குக் கட்ட வேண்டிய மின் தேவைக் கட்டணம் கட்ட வேண்டும்.<br>(I)பதிவான மின்தேவை 112 கிவா அளவிலும் கூடுதலாகாத போது ஒப்பந்த மின்தேவையிலும் மிகையாகவுள்ள ஒவ்வொரு கிவா அளவுக்கம் அல்லது அதன் பகுதிக்கும் மொத்த ஆற்றலுக்கான கட்டணத்தில் 1 விழுக்காடு கட்ட வேண்டும்,<br>(II) பதிவு செய்யப்பட்ட மின்தேவை 112 கிலோவாட்டுக்கு மேற்படுகிறவிடத்து, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவைக்கு மிகையான கிலோவாட் அல்லது அதன் பகுதி ஒவ்வொன்றிற்கும் :– | (ii) (c) ****<br>(I) ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு குறைவாகவும் மற்றும் 112 கிவா வரையிலும் இருக்கும்போது:<br>(A) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு மிகையாகாமல் இருக்கும்போது, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையைவிட மிகையாகும் ஒவ்வொரு கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றுக்கும், மொத்த மின்னாற்றல் கட்டணங்களில் 1 விழுக்காடு வீதம்<br>விளக்கம்: 'மொத்த மின்னாற்றல் கட்டணங்கள்' என்ற சொற்றொடர் 'மின்னாற்றல் வழங்கப்பட்டமைக்கான கட்டணங்கள்' என்ற சொற்றொடருக்கான அதே பொருளைக் கொண்டுள்ளதாக இருத்தல் வேண்டும். இது நிலையான / மின்தேவைக் கட்டணங்கள் மற்றும் மின்னாற்றல் கட்டணங்கள் ஆகிய இரண்டினையும் உள்ளடக்கும். |
| | – 112 கிவா வரை வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணங்களின் 1 விழுக்காடு வீதம்;<br>– மற்றும் முதல் இரண்டு நிகழ்வுகளுக்காக, 112 கிவாக்குக் கூடுதலான கிலோவாட் அல்லது அதன் பகுதி ஒவ்வொன்றிற்கும் 1.5 விழுக்காடு வீதம்;<br>– மற்றும் மூன்றாவது நிகழ்வுக்காக, 112 கிவாக்குக் கூடுதலாக, கிலோவாட் அல்லது அதன் பகுதி ஒவ்வொன்றிற்கும் 3 விழுக்காடு வீதம்<br>– மற்றும் அதன்பின்பு, அதாவது, நான்காவது மற்றும் பிந்திய நிகழ்வுகளுக்கு, 112 கிவாக்குக் கூடுதலாக, கிலோவாட் அல்லது அதன் பகுதி ஒவ்வொன்றிற்கும் 10 விழுக்காடு வீதம். | (B) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு மேற்படுகிறவிடத்து, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவைக்கு மிகையான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும்:–<br>– 112 கிவா வரை ஒவ்வொரு கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணங்களில் 1 விழுக்காடு வீதம்<br>– மற்றும் 112 கிவா அளவுக்கு மிகையான முதல் இரண்டு நிகழ்வுகளுக்கு, ஒவ்வொரு கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 1.5 விழுக்காடு வீதம்<br>– மற்றும் 112 கிவா அளவுக்கு மிகையான மூன்றாவது நிகழ்வுக்கு, ஒவ்வொரு கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 3 விழுக்காடு வீதம்<br>– மற்றும் அதன்பின்பு, அதாவது 112 கிவா அளவுக்கு மிகையான நான்காவது மற்றும் பிந்திய நிகழ்வுகளுக்கு ஒவ்வொரு கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 10 விழுக்காடு வீதம்<br>"(II) ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு அதிகமாகவும் ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது சமமாகவும் இருக்கும்போது: |

| | |
|---|---|
| | (A) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 150 கிவா அளவுக்கு மிகையாகாமல் இருக்கும்போது, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையைவிட மிகுதியான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் வழஙகப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணஙகளில் 1 விழுக்காடு வீதம்.<br><br>இந்த விதித்தொகுப்பின் 3 ஆம் ஒழுங்குமுறைவிதியின் (I) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின் (b) கூறின் வரம்புரையின்படி 'வழஙகப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணஙகள்' என்பது நிலையான / மின்தேவைக் கட்டணங்கள் மற்றும் மின்னாற்றலுக்கான கட்டணஙகள் ஆகும்.<br><br>(B) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 150 கிவா அளவுக்கு மிகையாகும்போது, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவைக்கு மிகையான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும்:–<br><br>– 150 கிவா வரையிலும் ஒவ்வொரு கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் வழங்கப்பட்ட மின்சாரத்திற்கான கட்டணங்களின் 1 விழுக்காடு வீதம்<br><br>– மற்றும் முதல் இரண்டு நிகழ்வுகளுக்கு, 150 கிவா அளவுக்குக் கூடுதலான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 1.5 விழுக்காடு வீதம்<br><br>– மற்றும் மூன்றாவது நிகழ்வுக்கு, 150 கிவா அளவுக்குக் கூடுதலான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 3 விழுக்காடு வீதம்<br><br>– மற்றும் அதன்பின்பு, அதாவது நான்காவது நிகழ்வு மற்றும் பிந்திய நிகழ்வுக்கு 150 கிவா அளவுக்குக் கூடுதலான கிவா அல்லது அதனுடைய பகுதி ஒவ்வொன்றிற்கும் 10 விழுக்காடு வீதம்'' |
| (III) இரண்டாவதாகவும் அதற்கு அடுத்தும் ஒப்பந்த மின்தேவையினாலும் பதிவாகும் மின்தேவை மிகையாகும் போது;<br><br>(A) பதிவான மின்தேவை 112 கிவா அளவினும் மிகுதியாகாத போது, நுகர்வோருக்கு அறிவிப்பு தந்துவிட்ட பிறகு நிலவும் சுமை ஒப்பளிப்பை இரண்டாம் முறை நேர்விலிருந்து ஒரு மாதத்துக்குள் பதிவான மின்தேவைக்கு மாற்றி விட்டு கூடுதல் சுமை தருவதற்கு விதிக்கப்படும் அனைத்து கட்டணங்களையும் அடுத்த பட்டியலில் உடன் சேர்க்க வேண்டும்.<br><br>(B) பதிவான மின்தேவை 112 கிவா அளவினும் மிகையானால் நுகர்வோருக்கு அறிவிப்பு தந்துவிட்ட பிறகு நிலவும் ஒப்பந்த மின் தேவையை 112 கிவா அளவுக்கு இரண்டாம் நிகழ்விற்குப் பிறகு ஒரு மாதக் காலத்துக்குள் மாற்றி, கூடுதல் சுமைக்கு விதிக்கும் அனைத்து கட்டணங்களையும் அடுத்த பட்டியலில் உடன் சேர்க்க வேண்டும். பதிவான மின் தேவை மூன்றாவதாகவும் அதற்கடுத்தும் 112 கி.வா அளவினும் மிகையானால், நுகர்வோர் விரும்பினால் உ.அ மின் வழஙகல் பெற விருப்பம் தெரிவிக்கலாம். | "(III) 112 கிவா மற்றும் அதற்கு குறைவான ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையுடைய நுகர்வோரின் ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையை திருத்தியமைத்தல், 112 கிவா அளவுக்குக் கூடுதலான தாழ்வழுத்த வகை ஆனால் 150 கிவா அளவுக்குக் குறைவான அல்லது அதற்கு சமமான உயரழுத்த வகைக்கு மாற்றுதல்:<br><br>இரண்டாவது மற்றும் பிந்திய நிகழ்வுகளில் பதிவுசெய்யப்பட்ட மின்தேவை ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையைவிட மிகையாகும் 112 கிவா ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை அளவுடைய நுகர்வோருக்கு, –<br><br>(A) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு மிகையாகாத நிகழ்வில், நுகர்வோருக்கு தகவல் அளித்துவிட்டு இருந்துவரும் மின்சுமை ஒப்பளிப்பு இரண்டாவது நிகழ்விலிருந்து ஒரு மாதத்திற்குள் பதிவுசெய்யப்பட்ட மின்தேவையின் அளவுக்கு மாற்றியமைக்கப்பட்டு மற்றும் கூடுதல் மின்சுமைக்கு பொருந்தக்கூடிய தொடர்புடைய கட்டணஙகள் அடுத்த மின்கட்டண பட்டியலில் சேர்க்கப்படுதல் வேண்டும்.<br><br>(B) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 112 கிவா அளவுக்கு அதிகமாக ஆனால் 150 கிவா அளவுக்குள் அல்லது அதற்கு சமமாக இருக்கும் நிகழ்வுகளில் (3) ஆம் ஒழுங்குமுறைவிதியின் (I) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின் (b) கூறின் வரம்புரையிலுள்ள நிபந்தனைகளை ஏற்பதற்குட்பட்டு பொருந்தக்கூடிய தொடர்புடைய அனைத்து கட்டணங்களையும் செலுத்தும் நேர்வில், இருந்து வரும் மின்சுமை ஒப்பளிப்பு பதிவு செய்யப்பட்ட பேரளவு மட்டம் வரையிலும் திருத்தியமைக்கப்படுதல் வேண்டும். எனினும் 3ஆம் ஒழுங்குமுறை விதியின் (1) ஆம் உள் ஒழுங்குமுறை விதியின் (b) கூறின் வரம்புரையின் கீழ், நுகர்வோர் தாழ்வழுத்த வகை வரம்பான 150 கிவா அளவுக்கு மாறுதலுக்கு விருப்பத்தேர்வு செய்யவில்லையெனில், நுகர்வோருக்கு தகவல் அளித்துவிட்டு, இருந்துவரும் மின்சுமை ஒப்பளிப்பு இரண்டாவது நிகழ்விலிருந்து ஒரு மாதத்திற்குள் 112 கிவா அளவிற்கு மாற்றியமைக்கப்படுதல் வேண்டும் மற்றும் கூடுதல் மின்சுமைக்கு பொருந்தக்கூடிய தொடர்புடைய அனைத்து கட்டணஙகளும் அடுத்த மின்கட்டண பட்டியலில் சேர்க்கப்படுதல் வேண்டும்; |

| | |
|---|---|
| | ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையான 112 கிவா அளவைவிட பதிவு செய்யப்பட்ட மின்தேவை மிகுதியாகும் மூன்றாவது மற்றும் அடுத்துவரும் நிகழ்வுகளுக்கு பதிவு செய்யப்பட்ட மின்தேவை அளவில் உயரழுத்த மின்னிணைப்புக்கு செலுத்தப்படவேண்டிய தொடர்புடைய அனைத்து கட்டணங்களையும் குறிப்பிட்டு தாழ்வழுத்த மின்னிணைப்பினை உயரழுத்த மின்னிணைப்பாக மாற்றுவதற்கான ஒருமாத அறிவிப்பினை உரிமதாரர் வெளியிடுதல் வேண்டும்.”<br><br>“(iv) 112 கிவா அளவுக்குக் கூடுதலாக ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது சமமாகவும் உள்ள நுகர்வோருக்கான ஒப்பளிக்கப்பட்ட மின்தேவை திருத்தியமைத்தல், உயரழுத்த வகைக்கு மாற்றுதல்:<br><br>112 கிவா அளவுக்குக் கூடுதலாக ஆனால் 150 கிவா அளவுக்கு குறைவாகவும் அல்லது சமமாகவும் உள்ள நுகர்வோருக்கு பதிவுசெய்யப்பட்ட மின்தேவை ஒப்பளிக்கப்பட்ட மின்தேவையைவிட மிகையாகும் இரண்டாவது மற்றும் அடுத்துவரும் நிகழ்வுகளில்<br><br>(A) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 150 கிவா அளவுக்கு மிகையாகாத நிகழ்வில், நுகர்வோருக்கு தகவல் அளித்துவிட்டு, இருந்துவரும் மின்சுமை ஒப்பளிப்பு இரண்டாவது நிகழ்விலிருந்து ஒரு மாதத்திற்குள் பதிவுசெய்யப்பட்ட பேரளவு மட்டம் வரை மாற்றியமைக்கப்பட்டு மற்றும் கூடுதல் மின்சுமைக்கு பொருந்தக்கூடிய தொடர்புடைய கட்டணங்கள் அடுத்த மின்கட்டண பட்டியலில் சேர்க்கப்படுதல் வேண்டும்.<br><br>(B) பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 150 கிவா அளவுக்கு மிகையாகும் நிகழ்வில், நுகர்வோருக்கு தகவல் அளித்துவிட்டு, இருந்துவரும் மின்சுமை ஒப்பளிப்பு இரண்டாவது நிகழ்விலிருந்து ஒரு மாதத்திற்குள் 150 கிவா மட்டம் வரை மாற்றியமைக்கப்பட்டு மற்றும் கூடுதல் மின்சுமைக்கு பொருந்தக்கூடிய தொடர்புடைய கட்டணங்கள் அடுத்த மினகட்டண பட்டியலில் சேர்க்கப்படுதல வேண்டும். எனினும், பதிவுசெய்யப்பட்ட மின்தேவை 150 கிவா அளவுக்கு மிகையாகும் மூன்றாவது அல்லது கூடுதலான எண்ணிகையிலான நிகழ்வுகளில், பதிவுசெய்யப்பட்ட மின்தேவை அளவில் உயரழுத்த மின்னிணைப்புக்கு செலுத்தப்பட வேண்டிய தொடர்புடைய அனைத்து கட்டணங்களையும் குறிப்பிட்டு தாழ்வழுத்த மின்னிணைப்பினை உயரழுத்த மின்னிணைப்பாக மாற்றுவதற்கான ஒருமாத அறிவிப்பினை உரிமதாரர் வெளியிடுதல் வேண்டும்.” |
| (iii) தற்காலிக மின் வழங்கலைப் பொருத்தவரையில், மிகை மின்தேவைக் கட்டணம் பின்வருமாறு இருத்தல் வேண்டும்.<br><br>(a) உயர் அழுத்த மின் வழங்கலுக்கு, ஒப்பளித்த மின்தேவைக்கு மிகையான மின்தேவைக்கு இயல்பான கட்டணத்தைப் போன்று இரு மடங்கு கட்டணம் விதிக்கப்படுதல் வேண்டும்.<br><br>(b) தாழ்வழுத்த மின் வழங்கலுக்கு, பதிவான மின்தேவை 112 கிவா அளவுக்கு மிகையாகாமல் இருக்கும்போது, ஒப்பளிக்கப்பட்ட மின்தேவைக்கு மிகையான ஒவ்வொரு கிலோவாட் அல்லது அதனுடைய பகுதிக்கான மிகை மின் தேவைக் கட்டணங்கள் மின் ஆற்றல் கட்டணத்தில் 1 விழுக்காடு வீதத்தில் இருத்தல் வேண்டும் மற்றும் பதிவான மின்தேவை 112 கிவா அளவைவிட மிகையாகும் போது, மிகை மின்தேவைக் கட்டணங்கள் இந்த ஒழுங்குமுறைவிதியின் 2(ii)(c) ஆம் உள் ஒழுங்குமுறைவிதியின் பத்தி II இல் குறித்துரைக்கப்பட்டவாறு இருத்தல் வேண்டும். | (iii) தற்காலிக மின் வழங்கலை பொருத்தவரையில், உஅ / தா அ மின் வழங்கலுக்கான மிகை மின்தேவை கட்டணங்கள் இந்த விதித்தொகுப்பின் (i) மற்றும் (ii) ஆம் கூறுகளில் குறித்துரைக்கப்பட்டவாறு இருக்கலாம். |

(தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஆணைப்படி)

சென்னை 600 008,
2020 செப்டம்பர் 17.

**சு. சின்னராஜலு,**
*செயலாளர்,*
*தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்.*

PRINTED AND PUBLISHED BY THE COMMISSIONER OF STATIONERY AND PRINTING, CHENNAI
ON BEHALF OF THE GOVERNMENT OF TAMIL NADU